தினமலர்
11 SEP 2020

# மாணவர்களின் கற்றல் மேம்பாடு ஆசிரியர்களுக்கு பயிற்சி பட்டறை

**சென்னை, செப். 11-** மாநகராட்சி பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த, ஆசிரியர்களுக்கு பயிற்சி பட்டறை துவங்கியது.

மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின், 'ஸ்மார்ட் சிட்டி' திட்டத்தின் கீழ், சீர்மிகு மற்றும் மாதிரி மாநகராட்சி பள்ளிகள் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில், மாநகராட்சி பள்ளிகளில், தரமான உட்கட்டமைப்புடைய வகுப்பறைகள், கற்றல் கற்பித்தலுக்கான, ஸ்மார்ட் வகுப்பறைகள், மேம்பட்ட விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், மாணவர்களின் உணர்வுகளை புரிந்து, கற்றல், கற்பித்தலில் புதிய நுட்பங்களை கையாளுதல், மாணவர்களுக்கு விருப்பமான பள்ளியாகவும் மாற்றப்படுகிறது.

**மாநகராட்சி பள்ளிகளை, ஸ்மார்ட் பள்ளிகளாக மாற்றுவதற்கு துவக்கமாக, இத்திட்டம் அமைகிறது**

இத்திட்டத்தில், மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்காக, ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறை நடத்தப்படுகிறது.

அதன்படி, சைதாப்பேட்டை, ஜோன்ஸ் சாலையில் உள்ள, மாநகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளியில், சீர்மிகு, மாதிரி திட்டத்தின் ஒரு பகுதியாக, தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் கணித ஆசிரியர்களுக்கு, பயிற்சி பட்டறை நேற்று துவங்கியது.

இதை, மாநகராட்சி கமிஷனர் பிரகாஷ் துவக்கி வைத்தார்.

இது குறித்து, கமிஷனர் பிரகாஷ் கூறியதாவது:

மாநகராட்சி பள்ளிகளை, ஸ்மார்ட் பள்ளிகளாக மாற்றுவதற்கு துவக்கமாக, இத்திட்டம் அமைகிறது.

மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த, இது உதவும்.

ஆசிரியர்கள், பயிற்சியில் ஆர்வத்துடன் பங்கேற்று, அதை மாணவர்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும்.

இவ்வாறு, அவர் கூறினார்.